**மே - 9**

**"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து யேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக." - கொலோ 2 : 6, 7**

பொதுவாக கள்ளப்போதகர்களுக்கு (அல்லது பெயர் கிறிஸ்தவ போதகர்கள்) விசுவாசத்தில் உறுதியாய் இருப்பது என்பது குருட்டு பிடிவாதத்துடன் இருப்பது என்பதுதான். நியாயமான தர்க்கத்தினாலும் வேதாகம ஆதாரங்களினாலும் நிரூபிக்கப்படாத கருத்தை ஒப்புக்கொண்டு பிடிவாதமாக இருப்பது தெளிவற்ற நேர்மையற்ற ஒரு மனநிலையை காட்டுகிறது. ஆனால் பிடிவாத வைராக்கியம் இல்லாதவன் பகுத்தறிந்து எளிமையான விசுவாசத்துடன் தேவனுடைய அதிகாரம்பெற்ற வேத வசனங்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்கிறான். இப்படி செயல்படுகிறவர்கள் மட்டுமே சத்தியத்தில் உறுதிப்படுகிறார்கள். பலமும் உறுதிபட்டவனான கிறிஸ்தவனுக்கும் மத வைராக்கியம் உள்ளவனுக்கு உள்ள வித்தியாசம் என்னவென்றால் ஒருவன் சத்தியத்தில் உறுதிப்பட்டிருக்கிறான், மற்றவன் தப்பறையில் உறுதிப்பட்டிருக்கிறான். **-Z ’03, 199 (R 3215)**

நம்முடைய சித்தத்தை ஒப்புவித்துவிட்டு யேசுகிறிஸ்துவின் சித்தத்தை நமது சொந்தமாக அங்கீகரித்துக் கொள்ளுவதினால் நாம் அவரை ஏற்றுக்கொள்ளுகிறோம். இந்த ஆரம்பம் விடாமற் செய்யப்பட வேண்டும். நம்முடைய தேவைகளை அவரிடமிருந்து மாத்திரம் எடுத்துக் கொள்ளும்போது நாம் அவருக்குள் வேர்கொண்டவர்களாக இருக்கிறோம். அவருடைய குணத்தைப் போலொத்த ஒரு குணத்தை நாம் உருவாக்கும் போது அவர்மேல் கட்டப்பட்டவர்களாக இருக்கிறோம். நாம் வசனத்தின்படி நிலைத்திருக்கும்போது அதினாலே நாம் விசுவாசத்தில் உறுதியாக எழுப்பப்படுகிறோம். நாம் நன்றியுடனே அதில் பெருகும்போது, நாம் ஸ்தோத்திரத்தோடே அதிலே விருத்தியாகிறோம். **- P '35, 62.**

**ஒத்த வாக்கியங்கள்** :-

யோவா 1:12; பிலி 1:27; 1தெச 4:1; யூதா 3,20; எபே 2:20-22; 3:17; 4:1; கொலோ 1:23; 3:17; ஏசா 61:3; 1கொரி 3:9,11; 1 பேது 2:5; 2பேது 2:12; அப் 20:32; 2 கொரி 1:21.

**கோபுர வாசிப்பு : Z ’14, 311 (R 5557).**

**வினாக்கள்** :- இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் உதவியாக இருந்ததும் பிரதிகூலமாக இருந்ததும் எது? அவைகளின் பலன் என்ன?